2012 மார்ச் 26] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

திட்டத்தை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு செயல்படுத்தி வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) 10 மற்றும் 11 ஆம் வகுப்பு படிப்பவர்களுக்கு தலா 1,500 ரூபாயும், 12 ஆம் வகுப்பு படிப்பவர்களுக்கு 2,000 ரூபாயும் அரசு நிதி நிறுவனத்தில் வைப்பீடு செய்யப்பட்டு, அவர்கள் பள்ளிப் படிப்பை முடித்த பின் வட்டியுடன் வழங்கப்படுகிறது. இந்த ஆண்டு 313.13 கோடி ரூபாய், மாணவ, மாணவியர் பெயரில் வைப்பீடு செய்யப்பட்டுள்ளது. வரும் நிதியாண்டில் 21.36 இலட்சம் மாணவ, மாணவியர் பயனடையும் வகையில், இத்திட்டத்திற்கு இந்த வரவு-செலவுத் திட்டத்தில் 366.70 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

92. தேர்தல் அறிக்கையில் உறுதியளிக்கப்பட்டவாறு, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு 2012-2013 ஆம் ஆண்டிலிருந்து பள்ளி மாணவ, மாணவியருக்கு விலை ஏதுமின்றி நான்கு ஜோடி சீருடைகளை வழங்கும். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், ஏற்கெனவே அறிவிக்கப்பட்டவாறு ஆறாம் வகுப்பிலிருந்து பயிலும் மாணவர்களுக்கு அரைக்கால் சட்டைக்குப் பதிலாக முழுக் கால் சட்டையும், பெண்களுக்கு சல்வார் கமீசும் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) 48.63 இலட்சம் குழந்தைகளுக்கு சீருடைகள் வழங்குவதற்காக இந்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 329.89 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதுமட்டுமல்லாமல், ஒன்றாம் வகுப்பிலிருந்து பத்தாம் வகுப்பு வரை படிக்கும் அனைத்துப் பள்ளிக் குழந்தைகளுக்கும் விலையில்லாக் காலணிகள் வழங்கும் திட்டத்தையும், 2012-2013 ஆம் ஆண்டிலிருந்து மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு தொடங்கி செயல்படுத்தும். (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டத்திற்காக இந்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 100 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தால் 81 இலட்சம் குழந்தைகள் பயனடைவார்கள்.

முற்பகல் 11-55

93. கல்வி கற்கும் முறையை எளிதாக்கவும், குழந்தைகளுக்கு ஏற்றதாக மாற்றவும், 2012-2013 ஆம் ஆண்டில் சிறப்புக் கல்வி உபகரணங்கள் மாணவ, மாணவியருக்கு அளிக்கப்படும். இத்திட்டத்தின்கீழ் ஒன்றாம் வகுப்பிலிருந்து பன்னிரண்டாம் வகுப்பு வரை படிக்கும் மாணவ, மாணவியருக்கு

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2012 மார்ச் 26

புத்தகப் பைகளும், ஆறாம் வகுப்பிலிருந்து பத்தாம் வகுப்பு வரை படிக்கும் மாணவ, மாணவியருக்கு ஜியாமெட்ரி பெட்டிகளும், ஒன்றாம் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்பு வரை படிக்கும் மாணவ, மாணவியருக்கு வண்ணப் பென்சில்களும், ஆறாம் வகுப்பிலிருந்து பத்தாம் வகுப்பு வரை படிக்கும் மாணவ, மாணவியருக்கு உலக வரைபடப் புத்தகமும் வழங்கப்படும். இதற்காக, இந்த வரவு-செலவுத் திட்டத்தில் 136.50 கோடி ரூபாய் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்குறிப்பிட்ட அத்தனைப் பொருள்களும் விலையில்லாமல் மாணவர்களுக்கு வழங்கிய பிறகு, மாணவர் தேவைக்கு எஞ்சியிருப்பது நோட்டுப் புத்தகங்கள் மட்டுமே. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, நோட்டுப் புத்தகங்களையும் விலையில்லாமல் ஒன்று முதல் பத்தாம் வகுப்பு வரை (மேசையைத் தட்டும் ஒலி) அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் படிக்கும் மாணவ, மாணவியருக்கு வரும் கல்வி ஆண்டு முதல் வழங்க மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசால் முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கென 150 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) நமது மாநிலத்தில் பிற துறைகளுக்கு ஒதுக்கப்படும் தொகையைவிட அதிகமாக, எப்போதும் வழங்கப்படாத உயர் அளவாக, பள்ளிக் கல்வித் துறைக்கு (மேசையைத் தட்டும் ஒலி) இந்த 2012-2013 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் 14,552.82 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியுள்ளோம். (மேசையைத் தட்டும் ஒலி)

உயர் கல்வி

94. உயர் கல்வியிலும், உயர் ஆராய்ச்சியிலும் முன்னணி மாநிலமாகத் தமிழகத்தை மாற்ற வேண்டும் என்பதே நமது மாண்புமிகு புரட்சித் தலைவி தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் பேரவா. ஏழைகளுக்கும் உயர் கல்வி தடையின்றி கிடைப்பதை உறுதி செய்திட, 2011-2012 ஆம் ஆண்டில் 11 புதிய கலை, அறிவியல் கல்லூரிகள் தொடங்கப்பட்டன. தேனி மாவட்டம், போடிநாயக்கனூரில் புதிய பொறியியல் கல்லூரி, ஸ்ரீரங்கத்தில் தேசிய தகவல் தொழில்நுட்ப நிறுவனம், (மேசையைத் தட்டும் ஒலி) தேசிய சட்டப் பள்ளி ஆகியவற்றை அமைப்பதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. நமது பல்கலைக்கழகங்களை சர்வதேச தரத்திற்கு உயர்த்தி அவற்றை நேர்த்திமிகு மையங்களாகவும், ஆராய்ச்சிகளை மேற்கொண்டு புதிய